Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024    மாசி 07    [18 - 02 - 1993]    வியாழக்கிழமை    ஓசை 866

## வடகிழக்குப் பாடசாலைகளில் ஆறு இலட்சம் மாணவர்கள்

வடக்குக் கிழக்கில் உள்ள பாடசாலைகளில் மொத்தமாக ஆறு இலட்சத்து இருபத்துநாலாயிரத்து முந்நூற்று இரண்டு மாணவர்கள் உள்ளதாக வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளிவிபரத்தின்மூலம் தெரியவந்துள்ளது. இதன்படி அம்பாறை மாவட்டில் மூன்று கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ் வரும் பாடசாலைகளில் 63920 மாணவ மாணவிகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மூன்று கோட்டக் கல்வி அலுவலகங் [6 ஆம் பக்கம் பார்க்க]

# பாரிய இராணுவ நடவடிக்கை மணலாற்றில் நேற்று ஆரம்பம்

## பொருள்கள் ஏற்றிவர மேலும் கப்பல்

[கொழும்பு]

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்ல நான்காவது கப்பலொன்றை வாடகைக்குப் பெற புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு பேச்சு வார்த்தை நடாத்தி வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## இராணுவ தலைமைப்பீடம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கில் படையினர் பங்குபற்றும் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மணலாறு பிரதேசத்தில் மேற்கொண்டு இருப்பதாக இராணுவ தலைமைப்பீடத்தை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

"வளசவ" என்ற பெயரில் இந்த இராணுவ நடவடிக்கையில் பெரும் தொகையான இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும், நேற்று அதிகாலை இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் மணலாறு பகுதியை தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவதாகும் என்றும், இதற்காக முகாம்களை விட்டு இராணுவம் வெளியேறிச்சண்டையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## விமானம் நோட்டம்

(வடமராட்சி)

தொண்டமனாறு பகுதியில் நேற்று முன் தினம் மாலை குண்டு வீச்சு விமானங்கள் ஒரு மணித்தியாலமாக வட்டமிட்டு நோட்டமிட்டன.

அப்பகுதிக்கு மாலை 5 மணியளவில் வந்த அவ்ரோ விமானம் ஒன்றும் உலங்கு வானூர்தி ஒன்றும் 6 மணி வரை தொண்டமனாறு பகுதியை மையமாக வைத்து உடுப்பிட்டி, வல்லை, வளலாய், ஊரிக்காடு பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டு விட்டுச் சென்றன.

இதேவேளை நேற்று காலை 7-30 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று குருநகர், மண்டை தீவு பாசையூர், கொழும்புத்துறை கடற்கரைப் பிரதேசங்களை நோட்டமிட்டுச் சென்றது.

இதேவேளை பொலிகண்டி கடற்பரப்பில் கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (21), யோ)

## நாளை தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமாரியில் எடுத்துவரப்பட்ட தபால்பொதிகள் இன்று தபாலகத்திற்கு எடுத்து வரப்படும் எனவும் இவை நாளை முதல் விநியோகிக்கப்படும் எனவும் தபாலக வட்டா

# குறைந்தவசதியுடன்யுத்தத்தை திறம்பட நடத்தும் பிரபாகரன்

## காலி எம். பியின் ஆதங்கம்

(கொழும்பு)

வசதிகள் குறைந்த நிலையிலும் புலிகளின் தலைவர் பிரபாகரன் இன்று யுத்தத்தைத் திறமையாகக் கொண்டு நடத்துகிறார். ஆனால் அனைத்து வசதிகளும் உள்ள எமது அரசால் அப்படி முடியவில்லையே என அண்மையில் பாராளுமன்றத்தில் காலித்துறை மாவட்ட எம். பி. களில் முனசிங்க கவலை தெரிவித்துள்ளார். முப்படைகளிற்கும் தொடர்புடைய விசேட ஏற்பாடுகள் சட்ட மூலங்களின் பிரேரணை மீதான விவாதங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அரசாங்கம் யுத்தத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி செயல்பட்டால்தான் வெற்றி பெற முடியும். யுத்தத்தின் வெற்றிக்கு கடற்படை பலமுள்ளதாக அமையவேண்டும். அமெரிக்காவில் இன்று கடற்படை பலமாக இருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் மன்னர்காலத்திலும் கூட கடற்படையைச்சக்தியுள்ளதாகவைத்துள்ளனர் பராக்கிரமபாகு மன்னன் போன்

குறிப்பிடலாம்.

விடுதலைப்புலிகளிடம் பத்து கப்பல்கள் உள்ளன. அவர்களுக்கு ஆயுதம்கொண்டு வரப்படுவது தடுக்கப்படவேண்டும். இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் இன்று எம்முடன் நெருக்கமாகச் செயல்படுவதால்தான் விடுதலைப்புலிகளின் கப்பலை பிடிக்கக்கூடியதாக இருந்ததை நாம் அறிவோம்.

பிரபாகரன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி போரை நடாத்துகிறார் ஆனால் நாம் வெத்தசாசமயில் இருக்கட்

## ஈழநாதம் 3-ம் ஆண்டுநிறைவு சிறப்புப் பரிசில்கள்

ஈழநாதம் மக்கள் தினசரி மூன்றாம்ஆண்டில் (19-02-92-18 02 93) பிரசுரமான சிறுகதை, கவிதை என்பவற்றில் சிற பானவற்றிற்கு தெரிவின் அடிப்படையில் பின்வரும் ஆக்கங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன:

### சிறுகதை

முதலாம் பரிசு
"அவரை ஒருமுறை சந்திக்க வேண்டும்"
கு ஐஸ்வர்யா

இரண்டாம் பரிசு
"பாலம்"
தாமரைச்செல்வி

மூன்றாம் பரிசு
1. "செவ்வரத்தம்பூ"
ந. கிருஷ்ணசிங்கம்
2. "சிணுங்கி"
கே, ஆர். டேவிட்

### கவிதை

# ராணுவ தலைமைப்பீடம் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஆயிரக்கணக்கில் படையினர் பங்குபற்றும் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மணலாறு பிரதேசத்தில் மேற்கொண்டு இருப்பதாக இராணுவ தலைமைப்பீடத்தை மேற்கோள்காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

"வனசவ" என்ற பெயரில் இந்த இராணுவ நடவடிக்கையில் மேலும் தொகையான இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர் என்றும், நேற்று அதிகாலை இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் மணலாறு பகுதியை தனது கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவதாகும் என்றும், இதற்காக முகாம்களை விட்டு இராணுவம் வெளியேறிசண்டையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# குறைந்தவசதியுடன்யுத்தத்தை திறம்பட நடத்தும் பிரபாகரன்

## காலி எம்.பியின் ஆதங்கம்

(கொழும்பு)

வசதிகள் குறைந்த நிலையிலும் புலிகளின் தலைவர் பிரபாகரன் இன்று யுத்தத்தைத் திறமையாகக் கொண்டு நடத்துகிறார். ஆனால் அனைத்து வசதிகளும் உள்ள எமது அரசால் அப்படி முடியவில்லையே என அண்மையில் பாராளுமன்றத்தில் களுத்துறை மாவட்ட எம்.பி. சுனில் முனசிங்க கவலை தெரிவித்துள்ளார். முப்படைகளிற்கும் தொடர்புடைய விசேட ஏற்பாடுகள் சட்ட மூலங்களின் பிரேரணை மீதான விவாதங்களில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் அரசாங்கம் யுத்தத்திலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி செயல்பட்டால்தான் வெற்றி பெற முடியும். யுத்தத்தின் வெற்றிக்கு கடற்படை பலமுள்ளதாக அமையவேண்டும். அமெரிக்காவில் இன்று கடற்படை பலமாக இருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் மன்னர்காலத்திலும் கூட கடற்படையைச்சக்தியுள்ளதாகவைத்துள்ளனர் பராக்கிரமபாகு மன்னன் போன்றோரை இவ்விடயத்தில் குறிப்பிடலாம்.

விடுதலைப்புலிகளிடம் பத்து கப்பல்கள் உள்ளன. அவர்களுக்கு ஆயுதம்கொண்டு வரப்படுவது தடுக்கப்படவேண்டும். இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் இன்று எம்முடன் நெருக்கமாகச் செயல்படுவதால்தான் விடுதலைப்புலிகளின் கப்பலை பிடிக்கக்கூடியதாக இருந்ததை நாம் அறிவோம்.

பிரபாகரன் முழுச் சக்தியையும் பயன்படுத்தி போரை நடாத்துகிறார் ஆனால் நாம் கெத்தாராமயில் கிரிக்கட் அடிக்கின்றோம் என்றார்.

# இளாலி கடலில் ஹெலி தாக்கு

# ஆறு படகுகள் எரிந்து நாசம்

## ஓட்டி ஒருவரைக் காணவில்லை

(வடமராட்சி)

இளாலிக் கடற்பரப்பில் சிறிலங்கா விமானப்படை நடாத்திய தாக்குதலில் ஆறு படகுகள் எரிந்துமுழ்கியதாகவும்ஒரு படகோட்டியைக்காணவில்லை எனவும் தெரிய வருகிறது. கடந்த திங்கட்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது

இச்சம்பவத்தின்போது உயிர் தப்பிவந்த முனையைச்சேர்ந்த படகோட்டி ஞானமுத்து குணசீலன் (வயது 25) என்பவர் தெரிவிக்கையில்;

"என்னுடன் முனையைச் சேர்ந்த முடியப்பு - யூலியஸ் பெர்னாண்டோ (வயது 25) ஒரு பிள்ளையின் தந்தை படகின் உரிமையாளர், எஸ். செல்வம் (வயது 23), துரை (வயது 20), இராசேந்திரம்- தாஸ் (வயது 23), கற்கோவளத்தைச்சேர்ந்த தங்கராசா (வயது 26) ஆகியோர் கூட்டாக ஒவ்வொரு படகிலும் உணவுப்பொருள்களை ஏற்றிக் கொண்டு இரண்டு படகுகளை ஒன்றாக இணைத்து ஒவ்வொரு படகிலும் இரண்டு என்ஜின்களைப் பொருத்தி வேகமாக வந்துகொண்டிருந்தோம்.

மாலை சுமார் 5 மணியளவில் வான் பரப்பில் இரண்டு சீ-பிளேன்களும், இரண்டு உலங்குவானூர்திகளும், ஒரு குண்டுவீச்சு விமானமும் எம்மை நோக்கி விரைந்துவந்தன. அங்கு வந்த உலங்குவானூர்திகள் எமது படகுகளை நோக்கித் தொடர்ச்சியாக ஒரு மணித்தியாலம் மாறிமாறி ரொக்கட், ஷெல், துப்பாக்கிவேட்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. இதேவேளை மற்றைய விமானங்கள் கடல் பகுதியில் வட்டமிட்டு நோட்டமிட்டவண்ணமிருந்தன.

பயத்தினால் நடுங்கிய நாங்கள் ஆறுபேரும் செய்வதறியாது மிக ஆழமான கடற்பகுதியில் குதித்தோம். எட்டாத தண்ணீரில் தத்தளித்துக்கொண்டிருந்தபோதும் உலங்குவானூர்தி எம்மை

[6 ஆம் பக்கம் பார்க்க]

# 1400 மெ.தொன் அரிசியுடன் 'குமாரி' நேற்று வந்தது

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தை நேற்றுக் காலை 6.00 மணியளவில் 'குமாரி' கப்பல் பொருள்களுடன் வந்து சேர்ந்தது.

இக் கப்பலில் அரிசி 1400 மெட்ரிக் தொன், மா 1100 மெட்ரிக் தொன், சீனி 400 மெட்ரிக் தொன், மஞ்சள் பருப்பு 50 மெட்ரிக் தொன், மைசூர் 20 மெட்ரிக் தொன், சவர்க்காரம் 13.5 மெட்ரிக் தொன், அமோனியம் சல்பேற்று உரம் 100 மெட்ரிக் தொன், ரி. டி. எம் உரம் 100 மெட்ரிக் தொன்.

மற்றும் புனர்வாழ்வுப் பகுதிக்கு 135 பரல் மண்ணெண்ணெய், டீசல் 30 பரலும், கெயருக்கு 100 பரல் மண்ணெண்ணெய் நீர் இறைக்கும் இயந்திரம், உதிரிப்பாகங்கள், இலங்கை வங்கிக்கு காகிதாதிகள், இலங்கை வங்கி சம்பந்தமான தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

# விமானம் நோட்டம்

(வடமராட்சி)

தொண்டமனாறு பகுதியில் நேற்று முன்தினம் மாலை குண்டு வீச்சு விமானங்கள் ஒரு மணித்தியாலமாகவட்டமிட்டு நோட்டமிட்டன.

அப்பகுதிக்கு மாலை 5 மணியளவில் வந்த அவ்ரோ விமானம் ஒன்றும் உலங்கு வானூர்தி ஒன்றும் 6 மணி வரை தொண்டமனாறு பகுதியை மையமாக வைத்துஉடுப்பிட்டி, வல்லை, வளலாய், ஊரிக்காடு பகுதியை பல தடவைகள் வட்டமிட்டு நோட்டமிட்டு விட்டுச் சென்றன.

இதேவேளை நேற்று காலை 7-30 மணியளவில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று குருநகர், மண்டைதீவு பாசையூர், கொழும்புத்துறை கடற்கரைப் பிரதேசங்களை நோட்டமிட்டுச் சென்றது.

இதேவேளை பொலிகண்டி கடற்பரப்பில் கடற்படையினரால் மீனவர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (21, யோ)

# நாளை தபால் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குமாரியில் எடுத்து வரப்பட்ட தபால்பொதிகள் இன்று தபாலகத்திற்கு எடுத்து வரப்படும் எனவும் இவை நாளை முதல் விநியோகிக்கப் படும் எனவும் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

# முத்திரைக்கு தட்டுப்பாடு

வடமராட்சிப் பகுதியில் முத்திரைகளுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வடமராட்சிப் பகுதியில்உள்ள தபாலகத்தோர்களுக்கு முத்திரைகளுக்காச் செல்லும் மக்கள் ஏமாற்றத்துடனேயே செல்கின்றனர். தனியார் கடைகளில் விற்பனை செய்யப்படும் முத்திரைகளைக் கூடுதல் பணம் கொடுத்தே மக்கள் வாங்கவேண்டியிருக்கின்றது. (25)

# ஈழநாதம் 3-ம் ஆண்டுநிறைவு சிறப்புப் பரிசில்கள்

ஈழநாதம் மக்கள் தினசரி மூன்றாம்ஆண்டில் (19-02-92-18 02 93) பிரசுரமான சிறுகதை, கவிதை என்பவற்றில் சிறப்பானவற்றிற்கு தெரிவின் அடிப்படையில் பின்வரும் ஆக்கங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன:

## சிறுகதை

முதலாம் பரிசு

"அவரை ஒருமுறை சந்திக்க வேண்டும்"

கு ஐஸ்வர்யா

இரண்டாம் பரிசு

"பாலம்"

தாமரைச்செல்வி

மூன்றாம் பரிசு

1. "செவ்வரத்தம்பூ"
   ந. கிருஷ்ணசிங்கம்
2. "சிணுங்கி"
   கே. ஆர். டேவிட்

## கவிதை

முதலாம் பரிசு

"வான்முகிலே அழுவது ஏன்?"

நிலா தமிழின்தாசன்

இரண்டாம் பரிசு

"சூரியநமஸ்காரம்"

சு. வி.

மூன்றாம் பரிசு

1. "எனக்குள் நான்"
   விவேக்
2. "கொஞ்சம் பொறுங்கள்"
   வினோ

குறிப்பு: 20-02-93 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் இடம் பெறவுள்ள இவ் ஆக்கங்களுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சியில் ஈழநாதம் மக்கள் தினசரிக்கு ஆக்கங்களைத் தந்துதவிய படைப்பாளிகள் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# மாதாந்த உதவிப் பணம் மீளாய்வு நடவடிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் பெறுவோர்கள் பற்றிய விபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றன. இம்மீளாய்வு நடவடிக்கைகளில் சமூக சேவைத் திணைக்கள உத்தியோகத்தரும், அவ்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

(மெலிஞ்சிமுனை ஊர்காவற்றுறை) சி. இராயப்பு லூயிஸ் என்பவரின் உலர்உணவு அட்டையும், (இல. 136571) குடும்ப பதிவு அட்டையும், பங்கீட்டு அட்டையும் 14-02 93 11-00 மணியளவில் சின்னக்கடை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்

(4306)

### 'நியூ விகரேஸ்'

ரெலிவிசன் வீடியோ டெக், றேடியோ, ரேப்றெக்கோடர், எலெக்ரோனிக் கமறா, கைக்கடிகாரங்கள் மற்றும் மின்சார வேலைகள் எமெஜன்சி லைற் பற்றறிகள் திருத்தி சார்ச் செய்தல், பாடல்கள் பதிவு செய்தல், வீடியோ படப்பிடிப்புகள் யாவும் நிபுணர்களால் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். நியூ விகரேஸ்' எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4060)

### துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுபமங்களா, முன்றில், ஆகவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனாவீதி, யாழ்ப்பாணம். [4061]

### சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம். 405. அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (4063)

### விஞ்ஞான கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்விக் கோட்ட இளம்மன்ற மாணவர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சி நேற்றுக் காலை யாழ் மத்திய கல்லூரியில் யாழ்ப்பாண கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளரால் சம்பிர

## சிவராத்திரி

அளவெட்டி தெற்கு (நாகேஸ்வரம்) சிறிநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மாலை 5.30 மணியிலிருந்து மகாசிவராத்திரி விரத விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற இருக்கின்றன.

நள்ளிரவு 12 மணிக்கு நடைபெறும் லிங்கோற்பவ பூசையை அடுத்து லிங்கோற்பவ மூர்த்தி வீதி வலம் வருவார் (21)

★

புலோலி சாரையடி அருள்மிகு வீரபத்திரர் ஆலயத்தில் இம்மாதம் 19ஆம் திகதி சிவராத்திரி திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறுகின்றன. (25)

★

கொடிகாமம் நாவலடி அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் ஆலய மகா சிவராத்திரி விழா நாளை வெள்ளிக்கிழமை இரவு விசேட அபிசேகத்துடன் பூஜை நடைபெறும், பின்பு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★

சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் மகாசிவராத்திரி தினத்தன்று இரவு சதுரங்கப்பட்டி மன்றம் ஒன்று கலைஞர் திரு. நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது களம் செல்லும் வீரர்களுக்கு வழி காட்டக் கூடிய கௌரவத்தை பெற்றிருப்பவன் இராமனா? இராவணனா? கர்ணனா? அருச்சுனனா? என்ற விவாதம் நடைபெறும் இதனையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (86)

★

நவாலி அட்டகிரி விசாலாட்சி விஸ்வநாத கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நவோத்திர சங்காபிஷேகமும், அதைத்தொடர்ந்து சிவபெருமானுக்கு பஞ்சமுகார்ச்சனையும், பஜனையும், இசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது பின்னிரவு 1-30 மணியளவில் லிங்கோற்சவ பூசையும் இடம்பெறும்.

★

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஆதிமுத்துமாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழ சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் நான்கு சாமப் பூசையும், ஆலய பஜனைத் தொண்டர்களின் பஜனையும், சமயசொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

★

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானத்தில் நாளை மகாசிவராத்திரி விழா சிறப்புற நடைபெறவுள்ளது

இந் நிகழ்ச்சியில் நான்கு

## செயலக கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சகல திணைக்களங்களையும் சேர்ந்த தலைவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 9.30 மணியளவில் யாழ். செயலக கேட்போர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இக்கூட்டத்தில் யாழ். அரச அதிபர் சகல திணைக்களத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அன்னைமடியில்:
04-02-1981



இறைவனடியில்:
19-01-1993

செல்வி

### ரட்ணராஜா பிரிசில்டாமேரி (தீபா)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித மரியாள் பேராலயத்தில் 18 - 02 - 1993 வியாழக்கிழமை காலை 6. 30 மணிக்கு துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ் நன்றித் திருப்பலியில் அனைவரையும் பங்கு கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
தாய், தந்தை,
பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பாமார், அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: ச. துரைராஜா குடும்பத்தினர்
B.71, நாவற்குழி

[4298]

## நன்றி நவிலல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1965 | | 1993 |
| 11 | | 01 |
| 20 | | 18 |



### செல்வன் சுமது சுந்தையா

(தொண்டர் ஆசிரியர் தாவளை இயற்றாலை அ. மி. த. க பாடசாலை)

எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவின் போது வருகை தந்து எமது மீளாத் துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறி அனைத்து உதவிகளும் செய்தவர்களுக்கும், காலனுடன் இறுதிவரை போராடிய வைத்தியர்களுக்கும், வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும். மற்றும் உற்றார், உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள், அனைவர்க்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இதய பூர்வமான நன்றிகள்.

"தோஞ்சலி" - குடும்பத்தினர்.

## தேவை

***IBM or IBM Compatiable Computers*** தேவை.


தொடர்புகட்கு:

**UNIKCO COMPUTER CENTER**

37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(சி-6049)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### திரு. S. மார்க்கண்டு

(பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்)

தோற்றம் 1945-12-19 மறைவு 1993-01-19

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் திருவுருவாய் வாழ்ந்து எம்மை
பாசத்துடன் காத்து ஈசனடி சேர்ந்த எம்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் (18-02 93) இன்று வியாழக்கிழமை நண்பகல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர் சகபணியாளர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைசிறுவம், கொடிகாமம். மனைவி, பிள்ளைகள்

[சி/6048]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-18

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை -தங்கவேலாயுதபுரம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ரவிக்குமார் (ம. புண்ணியமூர்த்தி - தம்பிலுவில்-01 -

சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும். நியூ விக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (4060)

## துளிர்

தமிழ் நாடு அறிவியல் இயக்கமும் புதுவை அறிவியல் இயக்கமும் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான மாதாந்த அறிவியல் இதழ், மற்றும் சலனம், சுமங்கலா, முன்றில், ஆகவே, காலம், நந்தனா போன்ற தரமான சஞ்சிகைகளும் புத்தகங்களும் விற்பனையாகின்றன விபரங்கட்கு வசந்தம் புத்தக நிலையம், 405. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4061]

## சலனம்

சென்னை ஃபிலிம் சொஸைட்டி வெளியிடும் உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை இருமாத இதழாக வெளிவருகின்றது. விபரங்கட்கு, வசந்தம் புத்தக நிலையம். 405. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4063)

## விஞ்ஞான கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்விக் கோட்ட இளம் மன்ற மாணவர்களால் ஒழுங்கமைக்கப் பட்ட விஞ்ஞானக் கண்காட்சி நேற்றுக் காலை யாழ் மத்திய கல்லூரியில் யாழ்ப்பாண கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளரால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இக் கண்காட்சியில் யாழ்ப்பாணக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பத்து பாடசாலைகளும், வேலணைக் கல்விக் கோட்ட உயர்தரப் பாடசாலை ஒன்றும் பங்கேற்றுள்ளன.

செயல் முறைகளினூடாக விஞ்ஞானத்தைப் பயில்வதற்கான இக் கண்காட்சி இன்றும் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் நான்கு மணி வரையும் நீடிக்கும்.

## தற்கொலை

(கொடிகாமம்)

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து குடும்பஸ்தர் ஒருவர் திருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று வரணி நாவற்காட்டுப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

தற்கொலை செய்துகொண்டவர் மூன்று பிள்ளைகளின் தந்தையான எஸ் வேலாயுதம். (வயது 45) எனத் தெரியவந்துள்ளது. (86)

மகாசிவராத்திரி தினத்தன்று இரவு சதுரங்கப்பட்டி மன்றம் ஒன்று கலைஞர் திரு. நாகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது களம் செல்லும் வீரர்களுக்கு வழிகாட்டக் கூடிய கௌரவத்தை பெற்றிருப்பவன் இராமனா? இராவணனா? கர்ணனா? அருச்சுனனா? என்ற விவாதம் நடைபெறும் இதனையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (86)

★

நவாலி அட்டகிரி விசாலாட்சி விஸ்வநாத கோவிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு நவோத்திர சங்காபிஷேகமும், அதைத்தொடர்ந்து சிவபெருமானுக்கு டஞ்சமுகார்ச்சனையும், பஜனையும், இசைக் கச்சேரியும் இடம் பெறவுள்ளது பின்னிரவு 1-30 மணியளவில் லிங்கோற்சவ பூசையும் இடம்பெறும்.

★

(தொல்புரம்)

தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஆதிமுத்துமாரியம்மன் ஆலயத்தில் சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவில் நான்கு சாமப் பூசையும், ஆலய பஜனைத் தொண்டர்களின் பஜனையும், சமய சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளன.

★

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்தில் நாளை மகாசிவராத்திரி விழா சிறப்புற நடைபெறவுள்ளது

இந் நிகழ்ச்சியில் நான்கு சாமப் பூசைகளும், சொற்பொழிவுகள், கூட்டுப்பிரார்த்தனை என்பவற்றுடன் ஈழநல்லூர் அருணா இசைக்குழுவினரின் இசைத்தேனமுதமும் இடம்பெறவுள்ளது.

## நினைவஞ்சலிக் கூட்டம்

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி லெப். கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களதும் 31-ம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்று முன்தினம் அரியாலை செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தில் இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்க தலைவர் இ.கணேஸ் தலைமையில் நடைபெற்றது

பெருமளவு மக்கள் கலந்து கொண்ட இவ் நினைவஞ்சலிக் கூட்டத்தின்போது தமிழீழ சமூக பொருளாதார வளர்ச்சித்திட்ட பொறுப்பாளர் திரு சி ரவி மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்தார். சந்தோஷம்மாஸ்டரின் தந்தை தீச்சுடரை ஏற்றிவைத்ததை தொடர்ந்து இரு நிமிட மௌன அஞ்சலியுடன் நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமானது

இந் நிகழ்வில் பலர் உரை நிகழ்த்தினர்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித மரியாள் பேராலயத்தில் 18-02-1993 வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு துக்கப்பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இவ் நன்றி திருப்பலியில் அனைவரையும் பங்கு கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்

தாய், தந்தை,

பெரியப்பா குடும்பத்தினர், சித்தப்பாமார், அண்ணன்மார், அக்காமார், தங்கைமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: ச. துரைராஜா குடும்பத்தினர்

[4298] B.71, நாவற்குழி

## நன்றி நவிலல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1965 | | 1993 |
| 11 | | 01 |
| 20 | | 18 |



### செல்வி சுமதி சுந்தரையா

(தொண்டர் ஆசிரியர் தாவளை இயற்றாலை அ. மி. த. க பாடசாலை)

எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவின் போது வருகை தந்து எமது மீளாத் துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறி அனைத்து உதவிகளும் செய்தவர்களுக்கும், காலனுடன் இறுதிவரை போராடிய வைத்தியர்களுக்கும், வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கும். மற்றும் உற்றார், உறவினர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், மாணவர்கள், அனைவர்க்கும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் இதய பூர்வமான நன்றிகள்.

"கீதாஞ்சலி" - குடும்பத்தினர்.
மந்துவில் மேற்கு
கொடிகாமம். (3379)

## வடமராட்சியில் மேடையேறுகிறது

யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்
வழங்கும்
குழந்தை. ம. சண்முகலிங்கத்தின்

## 'யார்க்கெடுத்துரைப்பேன்'

(நாடகம்)

இடம்: மெதடிஸ் பெண்கள் உயர் கல்லூரி
காலம்: 19.2.1993 வெள்ளிக்கிழமை
நேரம்: மு. ப 10.00; பி. ப 3-00

பிரவேசச் சீட்டுக்கள் மண்டப வாயிலில் பெறலாம்

விளம்பர அன்பளிப்பு:
விநாயகர் தருமநிதியம்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

(4309)



அமரர்

### திரு. S. மார்க்கண்டு

(பரந்தன் இரசாயன தொழிற்சாலை ஊழியர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1945-12-19 | 1993-01-19 |

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் திருவுருவாய் வாழ்ந்து எம்மை
பாசத்துடன் காத்து ஈசனடி சேர்ந்த எம்
அன்புத் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் (18-02 93) இன்று வியாழக்கிழமை நண்பகல் நடைபெறும் வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர் சுற்றம் நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

தவசிகுளம், மனைவி, பிள்ளைகள்
கொடிகாமம். [சி/6048]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-2-18

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை -தங்கவேலாயுதபுரம் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ரவிக்குமார் [ம. புண்ணியமூர்த்தி - தம்பிலுவில்-01 - அம்பாறை]

அம்பாறை - கல்முனை, சம்மாந்துறைப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழிளைஞன்.

தமிழீழக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்காக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்க் கடற்றொழிலாளி.

1987 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ தாடி (குணசேகரம் கந்தசாமி - பூநகர், மூதூர் - திருமலை)

1988 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ ஆறுமுகம் சச்சிதானந்தம் (தங்கநகர், கிளிவெட்டி - திருமலை)

1990 ஆம் ஆண்டு யாழ் - வசாவிளான் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த-

ஜெகதாஸ் (சித்திரவடிவேல் கெங்காதரன் - சாத்தியதோட்டம், கரவெட்டி மத்தி - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்,

★ இக்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/6039]

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம் 3ஆண்டு நிறைவு போட்டி முடிவுகள்

## சிறுகதைப் போட்டி

**முதலாம் பரிசு**

"அப்புவும் நானும்"
சி. பரமானந்தன்
உச்சி அம்மன் கோயிலடி
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

**இரண்டாம் பரிசு**

"பசியல்ல...... தாகம்"
ப. கேதீஸ்வரநாதன்
120, பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு**

"தந்தையும் தம்பியும்"
சி. ஸ்ரீகணேசலிங்கம் (விஜயா)
அறிஞ்சன் வீதி,
வட்டுக்கோட்டை.

## கவிதைப் போட்டி

**முதலாம் பரிசு**

"இனியும் சுருண்டு படுக்காதே"
கி. சிவஞானம்
வண்ணாங்கேணி,
பளை.

**இரண்டாம் பரிசு**

"புதுக்கீதை பிறக்குது ஈழத்திலே"
வளவை வளவன் (த. மா. செல்லத்தம்பி)
மந்துவில், கொடிகாமம்.

**மூன்றாம் பரிசு**

"இலக்கு"
சி. ஜெயவதனா
முள்ளியவளை.

## கருத்துப் படப்போட்டி

கருத்துப் படப் போட்டியில் பெருமளவானோர் பங்கு பற்றிய போதும் பரிசிற்கு தகுதியுடையதாக எதுவும் தெரிவாகவில்லை. எனினும் போட்டியில் பங்குபற்றிய மூவருக்கு ஊக்குவிப்பு பரிசுகள் வழங்கப்படுகின்றன. அவர்களின் விபரம் வருமாறு:-

குமாரசாமி சூரியகுமார்
மே/பா. திரு. சீ. அருணம்பலம்
ஏழாலை வடக்கு, ஏழாலை.

வி. மனோகர்
252, பருத்தித்துறை வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

முத்துக்குமாரு இராதாகிருஷ்ணன்
கலாசாலை - அருகில்
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

# ஆசிரியர் இடமாற்றம் சுற்றறிக்கை வெளியாகியது

ஆசிரியர்கள் இடம் மாற்றப்படுகின்றபோது அப்பாடசாலைகளுக்கு எதுவித கஷ்டங்களும் ஏற்படக்கூடாதென ஜோர்ஜ் பெர்ன்டிஸ் சகல உத்தியோகத்தர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

பொருத்தமான தகைமைகளைக்கொண்ட வேறொரு ஆசிரியர் அவ்விடத்திற்கு நியமிக்கக்கூடியதாக இருக்கும் பட்சத்திலேயே ஓர் ஆசிரியரை இடமாற்றம் செய்ய முடியும் என கல்விச்சேவைகள் சபை விசேட உத்தரவொன்றை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஆசிரியர்கள் இடமாற்றம் தொடர்பான தேசியக் கொள்கைகள் பற்றிய தீர்மானத்தை விளக்கும் சுற்றறிகை ஒன்று சகல மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளர்களுக்கும், மாகாணக் கல்விபணிப்பாளர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கட் போட்டிகள்

யாழ் இந்துக்கல்லூரிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் 19 வயதிற்குட்பட்ட வருடாந்த கிரிக்கட் போட்டி இன்றும், நாளையும் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (42)

★ ★

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும், சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் 19 வயதிற்குட்பட்ட வருடாந்த கிரிக்கட் போட்டி நாளைவெள்ளிக்கிழமையும், நாளை மறுதினம் சனிக்கிழமையும் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (42)

# பேராதனை பல்கலைக்கழக மாணவர் மீது பொலிஸ் தாக்கு தலைவர் உட்பட 25பேர் கைது

[கண்டி]

பல்கலைக்கழக மாணவர் பேரணிமீது கண்டி பொலிசார் குண்டாந் தடிப் பிரயோகம் செய்ததுடன் சுமார் 25க்கு மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கண்டி நகரில் தென்னிலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த மாணவர்கள் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தினர்.

அப்போது கண்டி குயின்ஸ் உல்லாச பயணிகள் ஹோட்டல் அருகே பொலிசார் குண்டாந்தடி பிரயோகம் செய்தனர்.

இதன் பின்னர் கண்டிசந்தை அருகே நின்ற மாணவர்களில் சுமார் 25 பேர் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர். இதில் கொழும்பு, பேராதனை பல்கலைக்கழக மாணவ அவையின் தலைவர்கள் உள்ளடங்குகின்றனர் என்று தெரியவருகின்றது.

## ஓராண்டு நிறைவு விழா

இந்திரன் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் ஓராண்டு நிறைவு விழா இன்று இந்திரன் கல்வி வளர்ச்சிக்கழக பொறுப்பாளர் திரு. ஐ. குமரதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத்தில் மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிறைவு விழாவில் பிரதமவிருந்தினராக யாழ் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மகளிர் பதில் பொறுப்பாளர் செல்வி சுஜுனா மற்றும் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பதில் பொறுப்பாளர் திரு. சோ தங்கன் ஆகியோர்கலந்து உரை நிகழ்த்தவுள்ளனர்.

## மகா சிவராத்திரி விழா

கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில், இந்து சமய அபிவிருத்திச் சங்கத்தின் ஆதரவுடன் மகாசிவராத்திரி விழா கொண்டாடப்படவுள்ளது. வயலின் இசைக்கச்சேரி இன்னிசைக் கச்சேரி, வில்லிசை நிகழ்ச்சி என்பவற்றுடன் விசேட ஆராதனைகளும், நடைபெறவுள்ளன.

★ ★ ★

சாவகச்சேரியில் அமிர்த பாவுணி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் மகா சிவரத்திரி தினத்தை முன்னிட்டு அன்றைய தினம் நான்கு சாமமும் விசேட அபிசேகங்களும், ஆராதனைகளும் நடைபெறவுள்ளன. அத்துடன் வழமைபோல் புராண படனம் மற்றும் கூட்டுப்பிரார்த்தனை, பக்திப் பாடல்கள் என்பனவும் இடம் பெறவுள்ளன,

★ ★ ★

வண்ணை சாத்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயத்தில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 39வது ஆண்டு விழாவும், சிவராத்திரி விழாவும் வெள்ளியன்று இரவு நடைபெறவுள்ளது. விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெறவிருக்கிறது. அத்துடன் சமய அறிவுப் பரீட்சையில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசு வழங்கல் நிகழ்ச்சியும், மற்றும உபந்நியாசம், இளைஞர் கருத்தரங்கு, வீணாகஹார் மாணவிகள் வழங்கும் வீணாகானம், யாழோசை கண்ணனின் வயலின் சோலோ, கூட்டுப்பிரார்த்தனை போன்றவையும் இங்கு இடம்பெறவுள்ளது.

## கல்வி உபகரணங்கள் திருட்டு அண்மைக் காலத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்]

வாழ்க்கைத் திறன் கல்விக்கான கருவி உபகரணங்கள் பள்ளிக்கூடங்களிலிருந்து களவாடப்படுவது அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.

1993 ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் அரியாலை சிறி பார்வதி வித்தியாலயம், புனித சாள்ஸ் ம. வி. கோப்பாய் நாவலர் வித்தியாலயம், உரும்பராய் சைவத்தமிழ். சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே குறடு, சுத்தியல், கத்தி, மண்வெட்டி, உளி, வாள் போன்ற கருவிகள் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா

நல்லூர் ப. நோ. கூ. சங்கத்தின் ஆதரவில்

## பத்தாம் நாள் நிகழ்ச்சிகள்

## 18-2-93 (வியாழன்) இன்று

## இடம்: மன்றக் கலாமண்டபம்

**மாலை 4.00 — 5.00 மங்கள இசை:**
நாதஸ்வரம் : எஸ். கோவிந்தராஜன்
மீ. செல்வக்குமார்
தவில் : ஏ. மீனாட்சிசுந்தரம்
எஸ். தட்சணாமூர்த்தி
எஸ். விஜயகுமார், எஸ். சதீஸ்குமார்

**5.00 — 5.15 வீணை:**
எஸ். லுசாந்தி, எஸ். சர்வலோகநாயகி,
எஸ். லக்ஷ்மி, நித்தில அரசி
மிருதங்கம்: எஸ். கஹிதரன்

**5.15 — 5.30 பாட்டு:**
இ. குமாரிபுஷ்பா, பா. பிரதீபன், இ. காயத்திரி,
சி. விஜிதா, ப. அர்பணா, சி. சிவப்பிரியா,
சி. சுமங்கலா, ப. வைதேகி, சி. சுசீலா,
பா. ஜெயராணி, சு. சுபாஷினி, சு. கானப்ரியா,
ச. சுவேந்திரா, சி. சயந்தன், ந. அபிராமி,
ச. தனுஷன்,
வயலின் : வி. கௌரி மிருதங்கம்: ரீ திருக்குமரன்

**5.30—6.00 வீணை:** எம். சோமசுந்தரசர்மா
மிருதங்கம்: எஸ். துரைராஜா

**6.00 — 6.45 வயலினிசை:**
வயலின் : எஸ். கோபிதாஸ்
மிருதங்கம்: கே. கண்ணதாசன்
கடம்: சதா வேல்மாறன்

**இரவு 6.45 — 7.00 மங்கள விளக்கேற்றல்**
திரு. க. பாலசிங்கம் (சித்திராலயா)
திரு. த சிவராசா (வர்த்தகர்)
திரு. இ. சற்குருநாதன் (வர்த்தகர்)
தலைவர்: இ. ராஜேஸ்வரன்
(தலைவர், நல்லூர். ப. நோ. கூ. சங்கம்)
சிறப்பு விருந்தினர்: எஸ். வேலாயுதம்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர்)

**7.00 — 8.00 இசைக் கச்சேரி**
பாட்டு : எஸ். சிவஞானசேகரம்
வயலின் : ஆர். ராதாகிருஷ்ணன்
மிருதங்கம் : எஸ். துரைராஜா
கடம்: எஸ். தபோதநாயகம்

**8.00 — 9.15 நாதஸ்வர இசை**
நாதஸ்வரம்: N. கபிலதாஸ்
A. மகேந்திரன்
தவில்: P. கணேசன்
N. கணேசன்
V. ராமச்சந்திரன்

வாழ்த்துவோர் :

**ரூபன் ஸ்ரோர்ஸ்**

திருநெல்வேலி மார்க்கட், திருநெல்வேலி
(சி-5965)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 – 09 – 1930



மறைவு: 01 – 08 – 1992

உயர்திரு

### அமரர் கந்தையா சிவசம்பு

(இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர், சண்டிலிப்பாய்)

**ஆண்டுத் திதி: 18-02-1993**

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

சிரித்து சிரித்து எம்மை சிறையிட்ட செல்வமே
நீர் மறைந்து ஓராண்டு ஆனதையா
புன்னகையை பெருநகையாய் புனைந்துநின்ற புனிதனே
பல்கலை உணர்வோடு பலகதைகள் சொல்வாய்
வீறுநடை போடுவாய் வெற்றியுடன் செயற்படுவாய்
கலங்காத நெஞ்சமுடன் கடமையில் கண்ணானாய்
கவர்ந்தாய் மக்கள் அனைவரையும் கலங்கவிட்டாய்
-எம்மையெல்லாம்

காலமும், காலனும் உங்களை எம்மிடமிருந்து பிரித்தாலும்
எம் இதயங்களில் நிற்கும் உங்கள் நினைவு மாறாது

தங்களின் ஆத்மா இறைவனின் பாதமலர்களில்
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,

மனைவி, பிள்ளைகள், சகோதரர், மருமக்கள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

திருமதி மனோன்மணி சிவசம்பு
'உதய பவனம்'
பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி.

(4295)

---

## பாலர் பாடசாலை திறப்பு

கைதடி இடம் பெயர்ந்தோர் முகாமில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலர் பாடசாலை சென்ற திங்கட்கிழமை தென்மராட்சி பிரதேச சபை செயலாளர் திரு. பு. சுந்தரம் பிள்ளை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப் பாடசாலையில் சுமார் 60 பிள்ளைகள் வரை அன்றைய தினம் சேர்க்கப் பட்டனர். புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் செலவினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி கிளையினர் வழங்கினர்.(86

---

## கிழக்கு இலங்கை பல்கலைக்கழகம் விரிவுரைகள்

கிழக்கு இலங்கை பல்கலைக்கழக பதிவாளரினால் அனுப்பப்பட்ட செய்தியில் அப்பல்கலைக்கழக விரிவுரைகள் இம்மாதம் 15-2-1993 ஆம் திகதி ஆரம்பமாகின்றன எனவும். விரிவுரைக்கு சமுகம் அளிப்பதற்காக மாணவர்களை பிறப்புச்சான்றிதழ், கல்விச் சான்றிதழ், (மூலப்பிரதிகள்) மற்றும் ஆவணங்களுடன் உடனடியாக கிழக்கு இலங்கை பல்கலைக்கழகத்தில் சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்,

மாணவர்களின் பெயர்ப் பட்டியல் பரீட்சைக்கிளை, யாழ் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப் பட்டுள்ளது. தனிப்பட்ட கடிதங்கள் அனுப்பி வைக்கப்படும்.

பதிவாளர்

(சி- 6047)

---

உ

வண்ணை - சாந்தையர்மடம்
ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

## சைவசமய அபிவிருத்திக் கழகம்

★ மேற்படி எமது கழகத்தினால் 07-02-1993 ஞாயிறு அன்று நடாத்தப்பட்ட சைவசமய அறிவுப் பரீட்சையின் பெறுபேறுகளை ஆலய வாயிலில் பார்வையிடலாம்.


★ பரிசளிப்பு வைபவம் 19-02-1993 வெள்ளிக்கிழமை சிவராத்திரி அன்று இரவு 7 மணிக்கு நடைபெறும்.

-சைவசமய அபிவிருத்திக்கழகம்.

(4304)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு: 25-09-1928

இறப்பு: 19-01-1993

### தில்லையம்பலம் பொன்னுச்சாமி

அன்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
அரவணைக்கும் பொக்கிசமே
அப்பா என்றழைத்த வாயால்
கதறி அழவைத்தீர்களே
உங்கள் பாசத்தில் வளர்ந்த
எம்மை பாரினிலே
பரிதவிக்க விட்டீர்களே

இவரது பிரிவால் துயரும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்
அழகன் குடும்பம்

கைதடி,
நாவற்குழி, கைதடி.

(4305)

---

# 31ஆம் நாள் அமரத்துவ அஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

காரைநகர் வாரி வளவு

அமரர்

## இராமு. சண்முகம் பேரம்பலம்

[உரிமையாளர்: E. S. பேரம்பலம் அன்கோ யாழ்ப்பாணம்]

தூல முகிழ்ப்பு
26. 04. 1926

தூல அவிழ்ப்பு
19. 01. 1993

**திதி: 18. 02. 1993**

எங்கே சென்றீர்
எங்கள் இதய தெய்வமே
இன்று
நீர் இல்லையென

இதயம்
நம்ப மறுக்கிறது
ஈ. எஸ். பி. என்றாலே
இடரெல்லாம் தீர்ந்துவிடும்
கண்கள் கலங்கிக்
கதறுகிறோம் உம் பிரிவால்
உம்மையிழந்த துயர்
எம்மை விட்டகலாது



அணைந்தும் அணையாத சோதியாய் அன்பு பாசம், பண்பு என்ற முக்கோணங்களிலும் சிறந்து வாழ்ந்து அரும் பெரும் சோதியில் சங்கமித்த எங்கள் அன்புக் குடும்பத் தலைவரும், ஈ. எஸ். பி. நிறுவன முதல்வருமான அமரர் E S. பேரம்பலம் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களிற்கும், இரங்கற் செய்தி அனுப்பியவர்கட்கும், பல்வேறு உதவி, ஒத்தாசை புரிந்து எம்மைப் பெருமைப்படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், அன்றைய நிகழ்ச்சியில் பங்கு கொண்டுசிறப்பித்த யாவர்க்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

இன்று 18.02.1993 காலை 9.00 மணிக்கு எமது இல்லத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்கான கிருத்தியங்கள் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்

**இ. ச. பேரம்பலம் அன்கோ**
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[4303]

**இ. ச. பேரம்பலம் குடும்பத்தினர்**
90, ஜும்மா மொஸ்க்லேன், யாழ்ப்பாணம்.

நல்லூ... லகம் ... யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

துணிவும், உணர்வும் உள்ள ஒரு மனிதனின் தலையாய செயல், செயலற்று ஒருபோதும் இராததே.

— ஜான் வெப்ஸ்டர்


# ஈழநாதம்

34, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் · 18 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2088


# இரத்தம் சிந்த தயாராக வேண்டும்

கண்டி நகரில் அரசிற்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பொலிசாருக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டதாகவும், பலர் காயமடைந்ததாகவும், பலர் கைது செய்யப்பட்டதாகவும் அறிய வருகின்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி உள்ளனர்.

அண்மைக் காலமாக பல்கலைக்கழக மட்டத்தில் பிரேமதாசா அரசிற்கெதிரான நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றமை முக்கியமானதொன்றாகும். இவ் எதிர்ப்பானது பல்கலைக்கழக ஆசிரியர் மட்டத்திலும் பலமாக உள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் மட்டத்தில் இருந்து அரச எதிர்ப்பு சக்திகளுக்குத் தலைமை கொடுக்க முயற்சிக்கும் அளவிற்கு விவகாரம் சென்றுள்ளது.

இதன் பிரதிபலிப்பாகப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு இடைஞ்சல்கள் விளைவித்தார் என்ற ரீதியில், களனி பல்கலைக்கழக கணிதப் பேராசிரியரும், அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர்சங்கத் தலைவருமான நளின் டீ சில்வா பதவிநீக்கப்பட்டதும் பல்கலைக் கழக விவகாரம் அரசியலில் பெற்று வரும் முதன்மையைக் காட்டுவதாகவே உள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை பொலிசார் வன்முறை மூலம் கலைக்கமுற்பட்டமை பல்கலைக் கழகத்திற்கும் அரசிற்கும் இடையிலான உறவுகளை மேலும் மோசமாக்குவதாகவே அமையும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இன்றுதனக்கு எதிராக எழும்பும் போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்க முற்பட்டமையானது சிறிலங்கா அரசின் அமைப்பு ரீதியான மாற்றத்தையே காட்டுவதாகும்.

ஏனெனில் சிறிலங்காவில் இன்று பொலிஸ் உள்ளிட்ட ஆயுதப் படையினர் பெரிதும் பலம் பெற்று விட்டதோடு அரசியலிலும் அவை தம்மை ஓர் சக்தியாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளனர். மொத்த தேசிய வருமானத்தில் சுமார் 7 வீதம் ஆயுதப் படையினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஓர் உயர்ந்த அளவீடாகும். கடந்த தசாப்தத்தில்

# கேணல் கிட்டுவின் உருவப்படம் திரைநீக்கம்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை சனசமூக நிலைய மண்டபத்தில் கடந்த திங்களன்றுமாலை 6 மணியளவில் மூத்த தளபதி கேணல் கிட்டு அவர்களின் திருஉருவப் படம் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நிலையத் தலைவர் திரு. சு சித்திரவடிவேல் தலைமையில் தமிழீழ விடுதலைப்புலிகள் சிறப்புத் தளபதி திரு.சூசை திருஉருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புத் தளபதி திரு. சூசை வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா, வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. வரதன், உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு என் அனந்தராஜ் மற்றும் பலரும் நினைவுரை நிகழ்த்தினர்.

மூத்த தளபதியின் 31 ஆம் நினைவு நாளையடுத்து இவ் வருடம் பொன்விழா காணும் இச் சனசமூக நிலையம் இவ் உருவப்படத்தை திரை நீக்கம் செய்து வைத்துள்ளது.

தொடர்ந்து கேணல் கிட்டுவின் போராட்ட வரலாற்று வீடியோ படமும் காண்பிக்கப்பட்டது. (யோ)

# வடமராட்சி கிழக்கில் அகதிகள் குடியேற்றம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் அம்பனுக்கும் நாகர் கோவிலுக்குமிடையில் புதிய குடியேற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த சுழிபுரம், காட்டுப் புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 200 குடும்பங்கள் அப்பகுதியில் குடியேற்றப்பட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளது.

இதுவரை சுமார் 95 குடும்பங்கள் அப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. ( 63)

# அநாதரவான நிலையில் 337 குடும்பங்கள்

(யாழ்ப்பாணம்)

வலி - மேற்கு இளவாலை, மாதகல் பகுதியிலிருந்து இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்து தற்போது சைதடி ரயர் தொழிற்சாலையில் தற்காலிக குடிசைகளில் வாழும் 337 குடும்பங்கள் சமூக நிறுவனங்களின் கவனிப்பின்றி நிர்க்கதிநிலையை அடைந்துள்ளனர்.

இவர்களுக் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை 302 தற்காலிக குடிசைகளை அமைத்துக் கொடுத்துள்ளது.

இதனையடுத்து மேலதிக புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட ஏனைய சமூகநல அமைப்புக்கள் தயக்கம் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## கடிதங்கள் கிடைக்க தாமதம்

# தேர்வுக்கு செல்ல முடியாமல் தொழில்நுட்ப ஆசிரியர் பாதிப்பு

தராதரமற்றதொழில்நுட்ப ஆசிரியருக்கான நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதங்கள் உரிய காலத்தில் கிடைக்காததனால் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் நடைபெற்ற தேர்வுக்கு யாழ். குடாநாட்டு விண்ணப்பதாரிகளால் சமூகமளிக்க முடியவில்லை. 30-10-92 இல் இந்த நேர்முகத் தேர்வு நடைபெற்றது.

இவ் விண்ணப்பதாரிகள் பிறிதொரு திகதி தருமாறு கோரியிருந்தும் பதில் கிடைக்காதனால் ஏமாற்றமடைந்துள்ளனர். இதனால் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தொழில் நுட்ப ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் தொடர்ந்தும் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தொழில் நுட்ப ஆசிரியர்கள் வெற்றிடங்கள் வருமாறு: மரவேலை - 17. உலோக வேலை - 9. நெசவு - 14. வனைதல் (மட்பாண்டம்) - 4. மோட்டார் பொறித் தொழில் - 9. வானொலி பொருத்தல் - 13. கடற்தொழில் -18. மேலும் சில பாடசாலைகளில் புதிதாகத் தொழிநுட்ப பாடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

# ஆந்திர பிரதேச சட்டசபையில் 47 உறுப்பினர்கள் சஸ்பென்ட்

## -சபாநாயகர் உத்தரவு

(ஹைதராபாத்)

ஆந்திர பிரதேச சட்டப் பேரவையில் அலுவல்களைத் தடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் மேலும் ஐந்து சட்டப்பேரவை உறுப்பினர்கள் சபையிலிருந்து ஒரு வாரத்திற்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று சட்டப் பேரவையில் இவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுக்காலை சட்டப் பேரவை கூடியதும், மற்றைய சட்டமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது பற்றி விளக்க முற்பட்டபோது இரண்டு பெண் எம். எல். ஏக்கள் உட்பட தெலுங்கு தேச உறுப்பினர்கள் சபாநாயகர் இருக்கைக்கு எதிரே அமர்ந்து ஆட்சேபனை தெரிவித்தனர். இதனையடுத்து சபைக் காவலர்களை அழைத்த சபாநாயகர் இவர்களையும் வெளியேற்றும்படி பணிப்புரை விடுத்ததுடன், சபை நடவடிக்கைகளில் இருந்து ஒருவார காலத்திற்கு சஸ்பெண்ட் செய்வதாகவும் அறிவித்தார்.

# போதைப்பொருள் கடத்தல் தடுப்பில் பாகிஸ்தான் அக்கறையீனம்

## -ஈரான் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

ஈரானில் பிடிபட்ட பாகிஸ்தான் பிரஜைகளான போதைப் பொருள் கடத்தல்காரர்களை வழக்கு விசாரணைக்காக பாகிஸ்தான் திருப்பி அழைக்காதது குறித்து ஈரான் அதிருப்தி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கான ஈரான் தூதுவர் மேலும் கூறுகையில், பாகிஸ்தானிலிருந்து ஈரானுக்கு பெருமளவில் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதாகவும், சென்ற ஆண்டு தெகிரானில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்களே என்றும், இதனால் ஈரானில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் இடையே குற்றவாளிகளை விசாரணைக்காக நாடு கடத்தும் ஒப்பந்தம் அமுலில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தல் உலகெங்கும் தீவிரம்

## அமெரிக்கா வரவேற்பு

(வாஷிங்டன்)

பர்மாவின் எதிர்க் கட்சித் தலைவியும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சான்சூகியின் விடுதலைக்காக நோபல் பரிசு வெற்றியாளர்கள் தாய்லாந்திற்கு விஜயம் மேற்கொண்டமையை அமெரிக்க வெளிநாட்டமைச்சு வரவேற்றுள்ளது.

இதேவேளை நோபல் பரிசு வெற்றியாளர்களின் குழுவிற்கு பர்மா செல்வதற்கான விசாவை வழங்க பர்மா அரசு மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## எஸ்.ஆர்.பி. மறுப்பு

பிரதமர் பி.வி. நரசிம்மராவை புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது சட்டப் பேரவையை கலைக்கும்படி தாம் கோரியதாக வெளிவந்த செய்தியை தமிழக சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் மறுத்துள்ளார்.

# மத்திய கிழக்கு சமாதானம்; பேச்சு மீண்டும் ஆரம்பம்

(வாஷிங்டன்)

செய்யவுள்ளார். சில சமயம்

செய்யப்பட்டதாகவும் அறிய வருகின்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் வடக்கு - கிழக்கு பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த இலங்கையில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றி உள்ளனர்.

அண்மைக் காலமாக பல்கலைக்கழக மட்டத்தில் பிரேமதாசா அரசிற்கெதிரான நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றமை முக்கியமானதொன்றாகும். இவ் எதிர்ப்பானது பல்கலைக்கழக ஆசிரியர் மட்டத்திலும் பலமாக உள்ளது. பல்கலைக்கழக ஆசிரியர் மட்டத்தில் இருந்து அரச எதிர்ப்பு சக்திகளுக்குத் தலைமை கொடுக்க முயற்சிக்கும் அளவிற்கு விவகாரம் சென்றுள்ளது.

இதன் பிரதிபலிப்பாகப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு இடைஞ்சல்கள் விளைவித்தார் என்ற ரீதியில், களனி பல்கலைக்கழக கணிதப் பேராசிரியரும், அனைத்துப் பல்கலைக் கழக ஆசிரியர்சங்கத் தலைவருமான நளின் டீ சில்வா பதவிநீக்கப்பட்டதும் பல்கலைக் கழக விவகாரம் அரசியலில் பெற்று வரும் முதன்மையைக் காட்டுவதாகவே உள்ளது.

இந்நிலையில் பல்கலைக்கழக மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தை பொலிசார் வன்முறை மூலம் கலைக்கமுற்பட்டமை பல்கலைக் கழகத்திற்கும் அரசிற்கும் இடையிலான உறவுகளை மேலும் மோசமாக்குவதாகவே அமையும் என்பதில் சந்தேகப்படத் தேவையில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் இன்றுதனக்கு எதிராகஎழும்பும் போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்க முற்பட்டமையானது சிறிலங்கா அரசின் அமைப்பு ரீதியான மாற்றத்தையே காட்டுவதாகும்.

ஏனெனில் சிறிலங்காவில் இன்று பொலிஸ் உள்ளிட்ட ஆயுதப் படையினர் பெரிதும் பலம் பெற்று விட்டதோடு அரசியலிலும் அவை தம்மை ஓர் சக்தியாக நிலை நிறுத்திக் கொண்டுள்ளனர். மொத்த தேசிய வருமானத்தில் சுமார் 7 வீதம் ஆயுதப் படையினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஓர் உயர்ந்த அளவீடாகும். கடந்த தசாப்தத்தில் அரசியல் வாதிகளின் பின் நின்று இராணுவம் செயற்பட்டது போன்று தற்பொழுது நின்று செயற்படக் கூடிய நிலையில் இல்லை. இராணுவத்தினரதும், ஏனைய ஆயுதப் படையினரதும் சம்மதம் இன்றி அரசாங்கத்தினால் தனித்துவமான முடிவு எதையும் எடுக்க முடியுமா என்றால் அது இன்று கேள்விக்குரியதே.

அதாவது சிறிலங்கா அரசாங்கம் தன்னை ஓர் ஜனநாயக ரீதியான அரசு எனக் கூறிக் கொண்டாலும், அது தற்பொழுது இராணுவத்தின் துணை கொண்டு நடத்தப்படும் ஓர் ஒற்றைக் கட்சி ஆட்சி முறை கொண்ட நாடு என்றே கூற வேண்டும். அதாவது பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சிங்கப்பூர் போன்றவற்றின் வரிசையில் சிறிலங்காவும் இடம்பெற்று விட்டது. இனிமேல், சிறிலங்காவில் ஜனநாயகம் கடைப்பிடிக்கப்பட வேண்டுமானால், தாய்லாந்தில் ஜனநாயகம் கோரிப் போராடியவர்கள் இரத்தம் சிந்தியது போன்று இவர்களும் இரத்தம் சிந்த வேண்டும். இரத்தம் சிந்தத் தயாராக இல்லாமல் 'ஜனநாயகத்தை' இவர்களால் வென்றெடுக்க முடியாது மார்க்கோசின் பிலிபைன்சிலும் இரத்தம் சிந்தியே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடிந்தது.

ஏனெனில் அரசாங்கம் இனிமேல் எப்பிரச்சினையையும் இராணுவ பலம் கொண்டே அடக்க முற்படும். இதில் பத்திரிகை என்ன? பல்கலைக்கழகமென்ன? எல்லாம் ஒன்றே. ஆனால் இதனைத் தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அண்மையில் ஆரம்பித்திருக்கலாம். ஆனால் வடக்கு - கிழக்கில் எழுபதுகளின் இறுதியிலேயே ஆரம்பித்து விட்டது என்பதே உண்மை.

---

வலிகாமம் வடக்கைச் சேர்ந்த சுழிபுரம், காட்டுப்புலம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 200 குடும்பங்கள் அப்பகுதி

றப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. [63]

கோரியிருந்தும் பதில் கிடைக்காதனால் ஏமாற்றமடைந்துள்ளனர். இதனால் யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தொழில் நுட்ப

பூமில் - 9. வானொலி பொருத்தல் - 13. வடற்தொழில் -18. மேலும் சில பாடசாலைகளில் புதிதாகத் தொழிநுட்ப பாடங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

---

# ஆந்திர பிரதேச சட்டசபையில் 47 உறுப்பினர்கள் சஸ்பெண்ட்

## -சபாநாயகர் உத்தரவு

(ஹைதராபாத்)

ஆந்திர பிரதேச சட்டப் பேரவையில் அலுவல்களைத் தடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் மேலும் எத்து சட்டப்பேரவை உறுப்பினர்கள் சபையிலிருந்து ஒரு வாரத்திற்கு சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று சட்டப் பேரவையில் இவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சஸ்பெண்ட் செய்யப்பட்ட பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுக்காலை சட்டப் பேரவை கூடியதும், மற்றைய சட்டமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டது பற்றி விளக்க முற்பட்ட போது இரண்டு பெண் எம். எல். ஏக்கள் உட்பட தெலுங்கு தேச உறுப்பினர்கள் சபாநாயகர் இருக்கைக்கு எதிரே அமர்ந்து ஆட்சேபனை தெரிவித்தனர். இதனையடுத்து சபைக் காவலர்களை அழைத்த சபாநாயகர் இவர்களையும் வெளியேற்றும்படி பணிப்புரை விடுத்ததுடன், சபை நடவடிக்கைகளில் இருந்துஒருவார காலத்திற்கு சஸ்பெண்ட் செய்வதாகவும் அறிவித்தார்.

# போதைப்பொருள் கடத்தல் தடுப்பில் பாகிஸ்தான் அக்கறையீனம்

## -ஈரான் குற்றச்சாட்டு

(இஸ்லாமாபாத்)

ஈரானில் பிடிபட்ட பாகிஸ்தான் பிரஜைகளான போதைப் பொருள் கடத்தல்காரர்களை வழக்கு விசாரணைக்காக பாகிஸ்தான் திருப்பி அழைக்காதது குறித்து ஈரான் அதிருப்தி தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானுக்கான ஈரான் தூதுவர் மேலும் கூறுகையில், பாகிஸ்தானிலிருந்து ஈரானுக்கு பெருமளவில் போதைப் பொருள்கள் கடத்தப்படுவதாகவும், சென்ற ஆண்டு தெகிரானில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களில் பெரும்பாலானோர் பாகிஸ்தானியர்களே என்றும், இதனால் ஈரானில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கும், ஈரானுக்கும் இடையே குற்றவாளிகளை விசாரணைக்காக நாடு கடத்தும் ஒப்பந்தம் அமுலில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் கடத்தல் உலகெங்கும் தீவிரம்

## - ஐ. நா. அறிக்கையில் தகவல்

(ஜெனிவா)

போதைப்பொருள் கடத்தல் உலகமெங்கும் தீவிரமடைந்து இருக்கின்றது ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்றில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் இதற்கு எதிராக சர்வதேச ரீதியிலும், பிராந்திய ரீதியிலும் ஒத்துழைப்பு இருக்க வேண்டுமெனவும் போதைப்பொருள் கடத்தல் காரர்கள் உலகெங்கும் போதைப் பொருள்களை விற்பனை செய்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த அச்சுறுத்தலை சமா

காஷ்மீர் விவகாரத்தில்

# இந்தியாவிற்கே ஆதரவு ரஷ்யா மீண்டும் ஊர்ஜிதம்

(டில்லி)

ஐக்கிய நாடுகள் சபையில் பாகிஸ்தான் காஷ்மீர் விவகாரத்தைக் கிளப்பும் என்று புதுடில்லி கருத்து தெரிவித்திருப்பதையடுத்து ரஷ்யா இந்தியாவிற்கான தனது ஆதரவை மீண்டும் உறுதிபடத் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரு நாடுகளினதும் வெளியுறவுச் செயலாளர்கள் மட்ட மாநாட்டில் மேலும், இரு நாட்டு பிரதிநிதிக் குழுக்களும் பரஸ்பரம் ஆலோசனை கலப்பதன் வாயிலாக ஐக்கிய நாடுகள் சபையிலும், பிற சர்வதேச அரங்குகளிலும் ஒத்துழைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### அடுத்த மாதம் விசாரணை

(சென்னை)

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பான விசாரணையை மேற்கொள்வதென சென்னைக்கருகே உள்ள பூந்தமல்லியில் அமைக்கப்பட்டுள்ள தனி நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட இருபத்தி ஆறு பேர் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி சித்திக் இந்த வழக்கின் விசாரணையை அடுத்த மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்தி வைக்க உத்தரவிட்டுள்ளார்.

### அமெரிக்கா வரவேற்பு

(வாஷிங்டன்)

பர்மாவின் எதிர்க்கட்சித் தலைவியும், நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சாங்சுகியின் விடுதலைக்காக நோபல் பரிசு வெற்றியாளர்கள் தாய்லாந்திற்கு விஜயம் மேற்கொண்டமையை அமெரிக்க வெளிநாட்டமைச்சு வரவேற்றுள்ளது.

இதேவேளை நோபல் பரிசு வெற்றியாளர்களின் குழுவிற்கு பர்மா செல்வதற்கான விசாவை வழங்க பர்மா அரசு மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### எஸ்.ஆர்.பி. மறுப்பு

பிரதமர் பி. வி. நரசிம்மராவை புதுடில்லியில் சந்தித்துப் பேசியபோது சட்டப் பேரவையை கலைக்கும்படி தாம் கோரியதாக வெளிவந்த செய்தியை தமிழக சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர்எஸ்.ஆர்.பாலசுப்பிரமணியம் மறுத்துள்ளார்.

# மத்திய கிழக்கு சமாதானம்; பேச்சு மீண்டும் ஆரம்பம்

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு நாடுகளுக்கான தனது சுற்றுப் பயணம் முடிவடைந்ததும் மத்திய கிழக்கு சமாதான பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் வாறன் கிறிஸ்தோபர் கூறியுள்ளார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின் போது அவர் எகிப்து, சிரியா, ஜோர்தான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார். சில சமயங்களில் அவர் லெபனானிற்கும் செல்லக்கூடும்.

இதனிடையே சமாதான பேச்சுக்களை ஆரம்பிப்பது பற்றி அரபு நாடுகளை வற்புறுத்துவதற்குப் பதிலாக இஸ்ரேல் மீது நிர்ப்பந்தம் பிரயோகிக்கப்பட வேண்டுமென நாடு கடத்தப்பட்ட பாலஸ்தீனியர்கள் அமெரிக்க வெளிநாட்டமைச்சரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# சர்க்கரை விலை உயர்வு; ஜெயலலிதா கண்டனம்

(சென்னை)

சர்க்கரை விலையை உயர்த்தியிருப்பதற்காக மத்திய அரசின் மீது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார். மத்திய அரசு நேற்றுமுதல் சர்க்கரையின் விலையை கிலோ ரூ. 6. 70 பைசாவிலிருந்து ரூ. 8. 30 பைசாவாக உயர்த்தியிருப்பது தெரிந்ததே.

இந்த விலையுயர்வு ஏழை எளிய மக்களையும், நடுத்தர வசதியுடைய மக்களையும் பாதிக்கும் எனவும், இம் மாதிரி விடயங்களில் மத்திய அரசு மாநில அரசைக் கலந்து ஆலோசிக்க வேண்டுமெனவும் ஜெயலலிதா தமது அறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

# காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணி தொடர்ந்து நீடிக்கும்

(சென்னை)

தமிழ்நாட்டில் அ. இ. அ. தி. மு. க. விற்கும், காங்கிரஸ் கட்சிக்கும் இடையிலான கூட்டணி உறவு இரு கட்சிகளின் நன்மை கருதியும், மாநில மக்களின் நன்மை கருதியும் தொடரப்பட வேண்டுமென மத்திய இணை அமைச்சர் கே. வி. தங்கபாலு சென்னையில் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்தார்.

# தேசவிரோதிகளால் விவசாயி சுட்டுக் கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் மூதூர் இராமங்களில் ரெலோ தேசவிரோதிகளும், சிறிலங்கா இராணுவத்தினரும் தொடர்ச்சியாக பொது மக்கள் மீது தாக்குதல் நடாத்தி வருவதுடன் பொதுமக்களை கைது செய்தும் வருகின்றனர்.

கடந்த 12 ஆம் திகதி ஈச்சிலம்பற்றையில் வயலில் காவலிற்கு நின்ற ஒரு பொதுமகனை ரெலோ தேசவிரோதிகள் சுட்டுக் கொன்றுள்ளனர். ஏழு பிள்ளைகளின் தந்தையான வத்தக்குட்டி துரைச்சாமி (வயது 45, ஈச்சிலம்பற்றை, மூதூர்) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொலைப் பட்டவராவார்.

இதேவேளை கடந்த 13ஆம் திகதியன்று மூதூர் சேனையூரைச் சேர்ந்த சித்திரவேல ரவிக்குமார் (வயது 24) என்பவரை சிறிலங்கா இராணுவத்தினர் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

மேலும் கடந்த 14ஆம் திகதி மூதூர் உப்பளம் என்னும் இடத்தில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரும், ரெலோ தேசவிரோதிகளும் சேர்ந்து கனகசபை அருள்குமார் (மாணவன், வயது 19, கட்டைபறிச்சான்) என்பவரை கைது செய்துள்ளனர்.

## இறால் உண்டவர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

இறால் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் நேற்று மயக்கமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் நேற்று சந்தையில் வாங்கிவந்த இறாலை சமைத்து உண்டதாகவும் பின்னர் மயக்கமுற்றதாகவும் தெரியவருகின்றது. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களின் உடல் நிலை தற்போது தேறிவருகின்றது.

வடகிழக்கு

களின் கீழ்வரும் பாடசாலைகளில் 112179 மாணவ மாணவியரும், யாழ். பிரதேசப்பணிமனையின் கீழ் வரும் ஆறு கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ்வரும் பாடசாலைகளில் 197190 மாணவ மாணவியரும், கல்முனை மாவட்டத்தின் கீழ்வரும் நான்கு கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ்வரும் பாடசாலைகளில் 87938 மாணவ மாணவியரும், கிளிநொச்சி கல்விப் பிரதேசத்தில் 33462 மாணவ மாணவியரும், மன்னார் கல்விப் பிரதேசத்தில் 26598 மாணவ மாணவியரும், முல்லைத்தீவு கல்விப் பிரதேசத்தில் 26849 மாணவ மாணவியரும், திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ்வரும் பாடசாலைகளில் 76206 மாணவ மாணவியரும் கல்விகற்கின்றனர்.

இவர்களில் யாழ் மாவட்டத்தில் உள்ள சாவகச்சேரி கோட்டத்தில் 23782 மாணவ மாணவியரும், யாழ் கோட்டத்தில் 46112 மாணவ மாணவியரும், மருதனார்மடக்கோட்டத்தில் 47687 மாணவமாணவியரும், பண்டத்தரிப்புக்கோட்டத்தில் 35557 மாணவமாணவியரும், வடமராட்சிக் கோட்டத்தில்

## அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு-1993

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் நடாத்தப்படும் அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு - 1993 விண்ணப்ப முடிவு திகதி 22-02-93 வரை நீடிக்கப் பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலை அதிபர்களும் குறித்த திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை அவற்றுக்குரிய நுழைவுக் கட்டணங்களுடன் தத்தம் பிரிவுக்குரிய கோட்டக்கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆண்டு 7 முதல் ஆண்டு 13 வரையிலான ஆறு பிரிவுகளாக நடைபெறும் இத்தேர்வில் ஒவ்வொரு பிரிவிலும் தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் உட்பட பல பெறுமதி மிக்க சிறப்புப் பரிசுகளும், கோட்ட மாவட்ட அடிப்படையில் மாணவர்களின் பெறுபேறுகளுக்கமைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

## கூட்டம்

(வடமராட்சி)

சதாவதானி கலைமன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் புலோலி மதி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

(யோ)

## நிர்வாகிகள் தெரிவு

(சுன்னாகம்)

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் நிர்வாக தெரிவுக்கான பொதுக்கூட்டம்சென்றவாரம் நடைபெற்றது. யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, வலிகாமம்கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன், உதவி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளையவன், உடுவில் வட்டவைப் பொறுப்பாளர் திரு. கலையரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

மேற்படி சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகசபையில் தலைவராக திரு த. ஜெயநாதன்,

## 93 தொழு நோயாளர் யாழ். இல் கண்டுபிடிப்பு

யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவில் சென்ற ஆண்டு 93 தொழுநோயாளர் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது இடம்பெயர்ந்து நெருக்கமாக மக்கள்வாழும்பகுதியில் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மானிப்பாய் பகுதியில் 35 பேரும், யாழ். மாநகர சபை பகுதியில் 14 பேரும், சாவகச்சேரியில் 17 பேரும், தெல்லிப்பழையில் 6 பேரும், கோப்பாயில் 14 பேரும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

இளாலி

நோக்கி மேற்கொண்ட தாக்குதல் நிறுத்தப்படவில்லை. தாக்குதல்கள் தொடர்ந்ததால் நீரில் மூழ்கி மேலெழும் புதுமாக இருந்தோம்.

அதேவேளை எங்கள் படகுகளின் உரிமையாளரான முடியப்பு - யூலியஸ் பெர்னாண்டோவின் தலையைக் காண முடியவில்லை. அவர் உலங்குவானூர்தியின் தாக்குதலில்பட்டு இறந்திருக்கக்கூடுமென நம்புகிறேன்.

மனத்தினால் நடுங்கிய நாங்கள் அவரை அப்பகுதியில் தேடினோம்தென்படவில்லை. இதேவேளை எமது படகுகள் எரிவதைக் கண்டேன்.

## சைவசித்தாந்தம் விரிவுரைத்தொடர்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம் பெற்றுவரும் சைவசித்தாந்தம் பற்றிய பொது விரிவுரைத் தொடரின் 8ஆவது அமர்வு வரும் சனிக்கிழமை காலை 9 முதல் 12 மணிவரை கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள 8வது அமர்விலே, மெய்யியல் துறை தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராசா அவர்கள் ''சைவசித்தாந்தத்தில் அறிவுக்கொள்கை'' என்ற பொருளிலும், திரு. ஆ. சபாரத்தினம் அவர்கள் ''காஷ்மீர சைவம்'' என்ற பொருளிலும் விரிவுரைகளை வழங்கவுள்ளார்கள்.

இவ்விரிவுரைத் தொடர்களிற்கு பதிவுசெய்த பங்குபற்றுனர்கள் மாத்திரமன்றி மேற்படி தலைப்பில் விரிவுரை கேட்க விரும்பும் எவரும் பார்வையாளராகக் கலந்து கொள்ளலாமெனப் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

## சந்திக்கவும்

கரவெட்டி பிரதேச செயலக மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு துன்னாலை ஞானசாரியார் கல்லூரியில் சந்திக்குமாறு கரவெட்டி பிரிவின் விளையாட்டு அலுவலர் கேட்டுள்ளார்.

## தையல் பயிற்சி

(பருத்தித்துறை)

யாழ் கிராம அபிவிருத்தித் திணைக்களம் புலோலியில் படித்த யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பொன்றை ஆரம்பிக்கவுள்ளது இத் தையல் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சிகளை

## வயிற்றோட்ட நோய் தீவிரமாகப் பரவுகிறது

குருநகர்ப்பகுதியில் வயிற்றோட்ட நோய் தீவிரமாக பரவி வருவதாக யாழ் மாநகரசபை சுகாதாரப் பகுதியினரின் புள்ளி விபரத்திலிருந்து தெரியவந்துள்ளது. கடந்த ஒருவார காலத்தில் இந் நோயினால் தாக்குண்ட சுமார் பதினாறு பேர்கள் குருநகர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என தெரிவிக்கப் படுகிறது.

இவ்வயிற்றோட்ட நோயையும், ஏனைய நோய்களையும் இப்பகுதியில் இருந்து ஒழித்துக்கட்டும் நோக்குடன் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் நோய்த்தடுப்பு பிரிவு ஒன்றை ஆரம்பித்துள்ளார்கள். இதன்மூலம் சுகாதார சேவைப் பிரிவினர் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து குருநகரிலுள்ள குடியிருப்பாளர்களை சந்தித்து சுகாதாரத்துடன் வாழ்வதன் நோக்கம் பற்றி எடுத்துரைத்து வருகின்றனர்.

இத்துடன் இங்குள்ள குடும்பநல சேவையாளருடன் சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. சிவலிங்கம், பொதுச் சுகாதார அதிகாரி திரு. அ. மயில்வாகனம் ஆகியோர் கருத்தரங்குகளை ஏற்படுத்தி சுகாதாரபோதனைகளை நடாத்தி வருகின்றார்கள். (17)

## மலேரியா நோய் தாக்கம் யாழ். மாவட்டத்தில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் மலேரியா நோய்க்கான மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாக யாழ் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த நோயின் தாக்கம் இந்த வருடம் மிகவும் அதிகமாக இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளது. இதேவேளை இவ்வாண்டுக்கான முதற்காலாண்டுக்குரிய பெரும் அளவு மருந்துப் பொருட்கள் இன்னும் வந்து சேராமையினால் பாரிய மருந்து தட்டுப்பாடு ஒன்றை பிராந்திய சுகாதார திணைக்களம் எதிர்நோக்குகின்றது என தெரியவருகின்றது.

இந்த மருந்துப் பொருள்களைக் கொண்டுவரும் பொருட்டு யாழ் சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள உயர் அதிகாரிகள் கொழும்புசென்று இருப்பதாகவும். இம்மாதம் இறுதி அல்லது அடுத்தமாத முதல் வாரத்தில் இம் மருந்து பொருள்கள் வந்து சேரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

மாதாந்த

வப்பகுதி கிராமசேவை அலுவலர்களும் ஈடுபட்டுவருகின்றனர். மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தவறாது தமது விபரங்களைத் தெரிவித்து மீளாய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ச. முருகேசபிள்ளை அறிவித்துள்ளார். (25)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 17-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8354

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-7419, 40-7207, 26-3582, 24-8429, 27-2056, 40-2677, 28-0854, 41-6686, 26 4882, 41-9166, 41-1996, 26-4888, 26-3608, 24-9788, 42-1494, 26-382, 24-5818, 26-3495.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

28-3233, 28-882, 26-[illegible]67, 42-828, 28-1992, 43-2524, 42-9628, 27-2016, 42-1750, 27-7081, 41-8557, 42-1721, 26-2397, 26 6029, 24-4854, 24-5396, 24-4992, 40 9188, 24-9676, 40-1516, 26 8839, 27-5217, 27-4888, 24-4292, 26-6075, 24-5029, 28 1636, 26-6983, 26-9658.

...வாங்கிவந்த இறாலை சமைத்து உண்டதாகவும் பின்னர் மயக்கமுற்றதாகவும் தெரிய வருகின்றது. பே தனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்களின் உடல் நிலை தற்போது தேறிவருகின்றது.

வடகிழக்கு

களின் கீழ்வரும் பாடசாலைகளில் 112179 மாணவ மாணவியரும், யாழ். பிரதேசப்பணிமனையின் கீழ் வரும் ஆறு கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ்வரும் பாடசாலைகளில் 197190 மாணவ மாணவியரும், கல்முனை மாவட்டத்தின் கீழ்வரும் நான்கு கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ்வரும் பாடசாலைகளில் 87938 மாணவ மாணவியரும், கிளிநொச்சி கல்விப் பிரதேசத்தில் 33462 மாணவ மாணவியரும், மன்னார் கல்விப் பிரதேசத்தில் 26598 மாணவ மாணவியரும், முல்லைத்தீவு கல்விப் பிரதேசத்தில் 26849 மாணவ மாணவியரும், திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள ஐந்து கோட்டக்கல்வி அலுவலகங்களின் கீழ்வரும் பாடசாலைகளில் 76206 மாணவ மாணவியரும் கல்விகற்கின்றனர்.

இவர்களில்யாழ் மாவட்டத்தில் உள்ள சாவகச்சேரி கோட்டத்தில் 23782 மாணவ மாணவியரும், யாழ் கோட்டத்தில் 46112 மாணவ மாணவியரும், மருதனார்மடக்கோட்டத்தில் 47687 மாணவமாணவியரும், வடமராட்சிக்கோட்டத்தில் 35557 மாணவமாணவியரும், வடமராட்சிக் கோட்டத்தில் 35471 மாணவ மாணவியரும், வேலணைக் கோட்டத்தில் 8581 மாணவ மாணவியரும் உள்ளார்கள் என இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (17)

பட்டுள்ளது.

அனைத்துப் பாடசாலை அதிபர்களும் குறித்த திகதிக்கு முன் விண்ணப்பப்படிவங்களை அவற்றுக்குரிய நுழைவுக் கட்டணங்களுடன் தத்தம் பிரிவுக்குரிய கோட்டக்கல்விப் பணிமனையில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

ஆண்டு 7 முதல் ஆண்டு 13

## கூட்டம்

(வடமராட்சி)

சதாவதானி கலைமன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் புலோலி மத்தி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். (யோ)

## நிர்வாகிகள் தெரிவு

(சுன்னாகம்)

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் நிர்வாக தெரிவுக்கான பொதுக்கூட்டம்சென்றவாரம் நடைபெற்றது. யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி, வலிகாமம்கோட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. திருக்குமரன், உதவி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளையவன், உடுவில் வட்டவைப் பொறுப்பாளர் திரு. கலையரசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

மேற்படி சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகசபையில் தலைவராக திரு த. ஜெயநாதன், செயலாளராக சோ. அருணகிரிநாதன், பொருளாளராக ஏ. சி. முத்துக்குமாரு ஆகியோர் உட்பட பதினொரு பேர் தெரிவுசெய்யப்பட்டனர். (11) (09,

மிக்க சிறப்புப் பரிசுகளும், மாவட்ட மட்ட அடிப்படையில் மாணவர்களின் பெறுபேறுகளுக்கமைய பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

# 93 தொழுநோயாளர் யாழ். இல் கண்டுபிடிப்பு

யாழ். பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவில் சென்ற ஆண்டு 93 தொழுநோயாளர் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தற்போது இடம்பெயர்ந்து நெருக்கமாக மக்கள்வாழும்பகுதியில் பெருமளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மானிப்பாய் பகுதியில் 35 பேரும், யாழ். மாநகர சபை பகுதியில் 14 பேரும், சாவகச்சேரியில் 17 பேரும், தெல்லிப்பழையில் 6 பேரும், கோப்பாயில் 14 பேரும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது.

இளாலி

நோக்கி மேற்கொண்ட தாக்குதல் நிறுத்தப்படவில்லை. தாக்குதல்கள் தொடர்ந்ததால் நீரில் மூழ்கி மேலெழும் புதுமாக இருந்தோம்.

அதேவேளை எங்கள் படகுகளின் உரிமையாளரான முடியப்பு - யூலியஸ் பெர்னாண்டோவின் தலையைக் காண முடியவில்லை. அவர் உலங்குவானூர்தியின் தாக்குதலுக்குட்பட்டு இறந்திருக்கக்கூடுமென நம்புகிறேன்.

மறுதினமும் நடுங்கிய நாங்கள் அவரை அப்பகுதியில் தேடினோம்தென்படவில்லை. இதேவேளை எமது படகுகள் எரிவதைக் கண்டேன்.

ஆறு படகுகளும், ஆறு என்ஜின்களும், படகுகளிலிருந்த உணவுப்பொருள்களும் எரிந்து கடலில் மூழ்கின. பொருள்களைக் கைவிட்டு நாங்கள் நீந்திக் கரைசேர முற்பட்டோம். அதேவேளை எமக்குப் பின்னால் வந்த படகுகள் மீதும் தாக்குதல்கள் நடந்தன.

நானும் தங்கராசாவும் நீந்திக் கரையை நோக்கி வந்துகொண்டிருந்தவேளை வானை இரைச்சல சத்தமும், சிங்கள மொழியில்கதைப்பதும் எமக்கு கேட்டது. அப்போது ஆனையிறவு முகாமை அண்மித்து விட்டோம் என்று கருதி திசைமாற்ற முற்பட்டோம். அப்போது இரவு பத்து மணிக்குமேல் இருக்கலாம். நாங்கள் கரையையடைய மூன்று மைல் தூரம் இருக்கும்போது உலங்குவானூர்தி எங்களைத் தாக்கியது. ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள நாங்கள் முற்பட்டோம். வானில் காணப்பட்ட வெள்ளியின் திசையைக் கொண்டு நாங்கள் மேலும் களைப்படைந்த நிலையில் நீந்த முற்பட்டோம். அல்லிப்பளைப் பகுதியை நோக்கிய போது படகு ஒன்று நடமாடுவதைக்கண்டு நாங்கள் அப்படகு மூலம் இளாலியை வந்தடைந்தோம்'' என்றார். [யோ]

கேட்க விரும்பும் எவரும் பார்வையாளராகக் கலந்து கொள்ளலாமெனப் பருத்தித்துறைப் பிரதேசப் பண்பாட்டுப் பிரிவின் இணைப்பாளர் திரு. இரா. சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

## சந்திக்கவும்

கரவெட்டி பிரதேச செயலக மெய்வல்லுனர் போட்டியில் கலந்து கொள்ளும் அனைத்து விளையாட்டுக் கழகங்களின் தலைவர்களை நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு துன்னாலை ஞானசாரியார் கல்லூரியில் சந்திக்குமாறு கரவெட்டி பிரிவின் விளையாட்டு அலுவலர் கேட்டுள்ளார்.

## தையல் பயிற்சி

(பருத்தித்துறை)

யாழ் கிராம அபிவிருத்தித் திணைக்களம் புலோலியில் படித்த யுவதிகளுக்கான தையல் பயிற்சி வகுப்பொன்றை ஆரம்பிக்கவுள்ளது இத் தையல் பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சிகளை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்த யுவதிகளுக்கான நேர்முகப்பரீட்சை 15 ஆம் திகதி பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ச. முருகேசபிள்ளையினால் நடாத்தப்பட்டது. இந் நேர்முகப் பரீட்சையில் தெரிவு செய்யப்படும் தையல் பயிற்சியாளர்களுக்கான வகுப்புகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படுமென பருத்தித்துறை கிராம அபிவிருத்தி அதிகாரி செல்வி நவமணி, கந்தையா தெரிவித்தார். (25)

பொருள்கள்

தற்சமயம் இச்சேவையில் ஈடுபட்டுள்ள குமாரி, குமண, மெரினால் கப்பலுடன் மேலதிகமாக ஒரு கப்பலை சேவையிலீடுபடுத்தவே இந்நடவடிக்கை என தெரிவிக்கப்படுகின்றன.

1400 மெ.

கப்பலில் வந்த பொருள்கள் விசுபட்டிப் பலில் தபால் திணைக்களத்திற்கு தபால்கள் எடுத்து வரப்பட்டதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனினும் 161 தபால் பொதிகள் வந்தன இத் தபால் பொதிகள் இறக்கப்பட்டன.

கப்பலிலிருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் உடனே ஆரம்பமானது. (யோ)

சுகாதார அத்தியட்சகர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்த நோயின்

மாதாந்த

வப்பகுதி கிராமசேவை அலுவலர்களும் ஈடுபட்டுவருகின்றனர். மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் தவறாது தமது விபரங்களைத் தெரிவித்து மீளாய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் திரு ச. முருகேசபிள்ளை அறிவித்துள்ளார். [25]

வந்து சேராமையினால் பெரிய மருந்து தட்டுப்பாடு ஒன்றை பிராந்திய சுகாதார திணைக்களம் எதிர்நோக்குகின்றது என தெரியவருகின்றது.

இந்த மருந்துப் பொருள்களைக் கொண்டுவரும் பொருட்டு யாழ் சுகாதார அத்தியட்சகர் பிரிவிலுள்ள உயர் அதிகாரிகள் கொழும்புசென்று இருப்பதாகவும். இம்மாதம் இறுதி அல்லது அடுத்தமாத முதல் வாரத்தில் இம் மருந்து பொருள்கள் வந்து சேரும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 17-02-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 8354

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-7419, 40-7207, 26-3582, 24-8429, 27-2056, 40-2677, 28-0854, 41-6686, 26 4882, 41-9166, 41-1996, 26-4888, 26-3608, 24-9788, 42-1494, 26-382, 24-5818, 26-3495.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

28-3233, 28-882, 26-[illegible]67, 42-828, 28-1992, 43-2524, 42-9628, 27-2016, 42-1750, 27-7081, 41-8557, 42-1721, 26-2397, 26 6029, 24-4854, 24-5396, 24-4992, 40 9188, 24-9676, 40-1516, 26 8839, 27-5217, 27-4888, 24-4292, 26-6075, 24-5029, 28 1636, 26-6983, 26-9658.


## மரண அறிவித்தல்

## திருமதி செல்லத்துரை வல்லவாம்பிகை

கொடிகாமத்தைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை வல்லவாம்பிகை காலமானார். இவர் கொடிகாமம் சுதேச வைத்தியர் வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்களின் அன்பு மனைவியும், தங்கலஷ்மி, சிவகுருநாதன் (சவூதி), வடிவாம்பிகை, கந்தசாமி, (பாரெயின்), ஞானேஸ்வரி பொன்னையா (ஜேர்மனி), தில்லைநாதன் (சவூதி), இந்திராதேவி, லிங்கநாதன் (பாரெயின்), மங்கையர்கரசி, ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்லத்துரை மீனா, கந்தசாமி, சித்திரா, குணசேகரம், சிறீதேவி, [ஜேர்மனி], ஜெகசோதி, ஆனந்தராஜா (பாரெயின்) தர்மகுலசிங்கம், ஆகியோரின் அன்பு மாமியாரும், சுமதி காலஞ்சென்ற சுதாங்கினி, (மாவீரர் றொசனி), சுதாநந்தினி சுபாகரன் சுகந்தன், சாந்தினி, அமுதா, காலஞ்சென்ற ஜெயந்தன், துஷ்யந்தன், மகிந்தன், துஷிகா, சுதர்சன், பிரியதர்சனி, தர்சன், நிரோசன், குணசீலன், குணபாரதி, குணவாணதி, குணதீபன், சர்மிளா, ஜெஸ்மினா, மீரா, அகிலன், சுஜன், கௌசிகன், விபுலன் யபுஷன், கௌசிகா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிஷாந்தி, சாரங்கி, லுஷானி ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (18 2-1993) வியாழக்கிழமை பகல் 10 மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அம்பிகை வாசம், கொடிகாமம். (4310) க. தர்மகுலசிங்கம் (ரவி) (மருமகன்)



யாழ் - மிட் ரவுண்

றோட்டறக்ற் கழகம் நடாத்தும்

## மாபெரும் கண்காட்சி

இடம்- யாழ். இந்து மகளிர் கல்லூரி

காலம்- 19-02-93 நண்பகல் 12.00 மணி- இரவு 10.00 மணி

20-2-93 காலை 8-00 மணி—மாலை 4 00 மணி

21.2.93 ,, ,, ,, — ,, ,,

★ கோலக்கண்காட்சி [300க்கு மேற்பட்ட கோலங்கள்]

★ கண்கவர் மீனினங்கள் [கடல் மீன்கள் உட்பட]

★ பல அரிய முத்திரைகள், முதல் நாள் உறைகள் [22 24 தங்க கரட் முத்திரைகள், தங்க முலாம் பூசிய தகடு முத்திரைகள், பேசும் முத்திரைகள் உட்பட]

★ பல்வகை விளக்கு வகைகள்

நுழைவாயில் சீட்டுக்கள் மண்டப வாசலில் பெற்றுக் கொள்ளலாம்.

விளம்பர அன்பளிப்பு:-

மக்மிலன் புத்தகசாலை

(சி6050)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1993 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது